# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 ஐப்பசி 12 செவ்வாய்க்கிழமை 29.10.2024 கதிர் 401







## அரச ஊழியரின் ஊதிய உயர்வு தொடர்பில்

# பிரதமரின் கருத்து பொய்



## முன்னாள் அமைச்சர் காஞ்சன குற்றச்சாட்டு



அரசாங்க ஊழியர்களின் ஊதிய அதிகரிப்பு தொடர்பில் பிரதமர் ஹரிணி தெரிவித்துள்ள கருத்து முற்றிலும் உண்மைக்கு புறம்பானதாகும். மக்களைத் தவறாக வழிநடத்தும் வகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார் என முன்னாள் அமைச்சர் காஞ்சனா விஜயசேகர குற்றம்சாட்டியுள்ளார்.

2➤

# அரசாங்க ஊழியர்களுக்கு ஜனவரியில் ஊதிய உயர்வு!

## அமைச்சரவைப் பேச்சாளர் விஜித ஹேரத் தெரிவிப்பு

கொழும்பு, அக். 29

நாட்டிலுள்ள அனைத்து அரசாங்க ஊழியர்களுக்கும் எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் ஊதிய உயர்வு வழங்கப்படும் என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாட்டில் வைத்து அமைச்சர் விஜித ஹேரத் இவ்வாறு தெரிவித்தார்.

ஏற்கனவே அறிவிக்கப்பட்டு நிலுவையிலுள்ள ஐயாயிரம் ரூபாவை ஜனவரி மாதம் முதல் வழங்குவதற்கும், சுற்றறிக்கையின் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டிய ஊதிய உயர்வு காலக்கிரமத்திலும் வழங்கப்படும் எனவும் அமைச்சர் அங்கு மேலும் தெரிவித்தார். (இ)

## வாகன இறக்குமதிக்கு அனுமதி!



கொழும்பு, அக் 29

வாகனங்களைக் கொள்வனவு செய்வது தொடர்பில் சரியானதொரு முறைமை அறிமுகப்படுத்தப்பட்டு, புதிய கொள்கைக்கு அமைவாக வாகனக் கொள்வனவு அனுமதிக்கப்படவுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டபோதே அமைச்சர் விஜித ஹேரத் இதனைத் தெரிவித்தார்.

மேலும், மேம்படுத்தப்பட்ட புதிய கொள்கைக்கு அமைவாக வாகனக் கொள்வனவுக்கு அனுமதி வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவும், மத்திய வங்கியும் அதற்கு இணங்கியுள்ளது என்றும் தெரிவித்துள்ள அமைச்சர், சரியான முறைமை தயாரிக்கப்பட்டதும் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படும் என்றும் குறிப்பிட்டார். (இ)

## சாவகச்சேரி நீதிமன்றத்தில் குண்டுப்புரளி சோதனையின் பின்னரே உள்நுழைய அனுமதி!



யாழ்ப்பாணம் - சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தில் குண்டுத் தாக்குதல் இடம்பெறப்போவதாகப் பொலீஸாருக்குக் கிடைத்த அநாமதேயத் தொலைபேசி அழைப்பொன்றை அடுத்து நீதிமன வளாகத்தில் காலை முதல் பொலிஸ், மற்றும் விசேட அதிரடிப் படையினர் குவிக்கப்பட்டு பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

கடுமையான சோதனைகளுக்கு பங்கேற்க வரும் பொதுமக்கள் நீதிமன்றத்தினுள் செல்ல அனுமதிக்கப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

பொலீஸாருக்குக் கிடைத்த அநாமதேயத் தொலைபேசி அழைப்பொன்றின் அடிப படையிலேயே பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகப் பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஐ)

## தபால் மூல வாக்களிப்பு நாளை ஆரம்பம்!



கொழும்பு, அக். 29,

நாடாளுமன்றத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு நாளை ஆரம்பமாகவுள்ளது என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன்படி மாவட்ட செயலகங்கள், தேர்தல் அலுவலகங்கள் மற்றும் பொலிஸ் நிலையங்களில் தபால் மூல வாக்களிப்புக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன

இதேவேளை நாளை தவிர்ந்து, அடுத்த மாதம் முதலாம் மற்றும் நான்காம் திகதிகளிலும் தபால் மூல வாக்களிப்புக்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

முப்படை முகாம்களிலும், அனைத்து அரச நிறுவனங்களிலும் அடுத்த மாதம் முதலாம் திகதியும் 4 ஆம் திகதியும் தபால் மூல வாக்களிப்பு இடம்பெறவுள்ளது.

குறித்த தினங்களில் வாக்களிக்க முடியாதவர்களுக்காக அடுத்த மாதம் 7 மற்றும் 8 ஆம் திகதிகளில் வாக்களிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. (ஐ)

# ரணிலைப் பிரதிவாதியாகச் சேர்க்க உயர் நீதிமன்றம் அனுமதி

கொழும்பு, அக். 29

பொலிஸ் மா அதிபராக தேசபந்து தென்னகோனை நியமித்தமைக்கு எதிராகத் தாக்கல்செய்யப்பட்டுள்ள மனுவில், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவைப் பிரதிவாதியாகக் குறிப்பிடுவதற்கு உயர் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

பொலிஸ் மா அதிபர் நியமனத்தைச் சவாலுக்குட்படுத்தி இளம் ஊடகவியலாளர்கள் சங்கத்தினால் தாக்கல் செய்யப்பட்ட மனு இன்று உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது.

2➤

## பிரதமரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தனது ஓ தள பதிவு ஒன்றிலேயே முன்னாள் அமைச்சர் காஞ்சனா விஜேசேகர இவ்வாறு குறிப்பிட்டார்.

பாதுக்கையில் நடைபெற்ற பேரணி ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோது அரசாங்க ஊழியர்களின் ஊதிய அதிகரிப்பு பற்றி முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

அமைச்சரவையில் அங்கீகாரம் பெறாமல் தேர்தலை இலக்காகக் கொண்டு அறிவித்தலை வெளியிட்டார் என்று பகிரங்கமாகக் குறிப்பிட்டிருந்தார்.

இதுபற்றி அமைச்சரவை அனுமதி மற்றும் இதர ஆதாரங்களுடன் ஓ தளத்தில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ள விடயங்கள் வருமாறு :

அரச துறை ஊழியர்களுக்கு 2025 ஜனவரி மாதம் முதல் ஊதிய உயர்வை வழங்குவது தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க உரிய செயற்பாடுகள் அனைத்தையும் மேற்கொண்டிருந்தார். 2024 மே மாதமளவில் அரசாங்க ஊழியர்களின் ஊதிய முரண்பாடு குறித்து ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கான நிபுணர் குழு ஒன்றை நியமித்து அதற்கான அமைச்சரவை அங்கீகாரத்தையும் பெற்றிருந்தார். நிணர் குழுவின் பரிந்துரைக்கமைய 2025 ஜனவரி முதல் வரவு செலவுத் திட்டதில் அரசாங்க ஊழியர்களுக்கான ஊதிய உயர்வுக்கு அமைச்சரவை அங்கிகரத்தையும் பெற்றிருந்தார். இந்திலையில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க தனது தேர்தல் பரப்புரைகளுக்காகவே அரசாங்க ஊழியர்களின் ஊதிய அதிகரிப்புப் பற்றி பேசினார் என்று நேற்று பிரதமர் ஹரிணஅமரசூரிய தெரிவித்துள்ளமையானது உண்மைக்குப் புறம்பானது என்றும். அது பொது மக்களை தவறாக வழி நடத்தும் என்றும் முன்னாள் அமைச்சர் தனது எக்ஸ் தள பதிவில் மேலும் தெரிவித்துள்ளார.

## ரணிலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சீராக்கல் மனு ஊடாக அழைக்கப்பட்ட போது, மனுதாரர் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் நீதிமன்றத்தில் ஆஜராகி, மனுவில் பிரதிவாதியாக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை குறிப்பிட அனுமதி கோரினார்.

இதன்படி, முன்னாள் ஜனாதிபதியைப் பிரதிவாதியாகக் குறிப்பிட அனுமதித்த மூவரடங்கிய நீதிபதிகள் அமர்வு, மனுவை எதிர்வரும் நவம்பர் மாதம் 11ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளவும் தீர்மானித்தது. (ஐ)

## ஜனாதிபதி - பிரதமர் முறுகல் என்பது வெறும் கட்டுக் கதை என்கிறார் ஹரிணி

கொழும்பு, அக். 29

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும், தனக்கும் இடையில் அரசியல் ரீதியில் மோதல் ஏற்பட்டுள்ளது என்று வெளியாகும் தகவல்கள் போலியானவை என்று பிரதமர் ஹறிணி அமரசூரிய தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில் “போலிகளை உருவாக்குவதிலும், கட்டுக்கதை களைப் பரப்புவதிலும் சிலர் வல்லவர்கள். இப்படியானவர்கள்தான், எனக்கும், தோழர் அநுரவுக்கும் இடையில் அரசியல் போர் ஏற்பட்டுவிட்டதாகக் கூறி வருகின்றனர்.

நாங்கள் தற்போது பேசுவதில்லையாம், விமர்சித்துக் கொள்கின்றோமாம். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவரைத் தெரிவு செய்யும்போது, நான் கூறிய நபர் தெரிவு செய்யப்படாததால் எனக்குக் கடும் கோபம் ஏற்பட்டதாம். அநுரவுடன் சண்டை பிடித்தேனாம்.

ஏதோ கூட்டத்தில் இருந்தவர்களைப் போல் கதைகளைக் கூறி வருகின்றனர். இவை போலியான தகவல்கள். இது பற்றி கருத்துக் கூற நான் விரும்பவில்லை. இருந்தாலும் போலிகளுக்கு முடிவு கட்ட வேண்டும். எனக்கும் தோழர் அநுரவுக்கும் இடையில் எவ்வித சண்டையும் இல்லை. போட்டியும் இல்லை.” என்றார். (இ)

# கேகாலை பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் படுகொலை : மனைவி காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதி!

கேகாலை, அக். 29

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கேகாலை பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் கிருஷாந்த புலஸ்தி கொலை செய்யப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கேகாலை, கொஸ்ஸின்ன பிரதேசத்திலுள்ள அவரது வீட்டினுள் கட்டிலில் கைகால்கள் கட்டப்பட்ட நிலையில் அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

75 வயதுடைய அவர் ஹெட்டிமுல்ல - புலுருப்ப பிரதேசத்தை சேர்ந்தவராவார். வாயில் பிளாஸ்டர் ஒட்டப்பட்டு காயங்களுடன் மீட்கப்பட்டுள்ள

அவரது மனைவி சிகிச்சைக்காக கேகாலை வைத்தியசாலையில் பொலிஸாரால் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வீட்டில் இருந்த அலமாரிகள் அனைத்தும் திறந்திருந்ததாகவும், திருடிச் செல்லப்பட்ட அவரது கார் பின்தெனிய பொலிஸ் பிரிவில் விட்டுச் செல்லப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

நீதவான் விசாரணையின் பின்னர் சடலம் கேகாலை வைத்தியசாலையில் மரண விசாரணைக்காக வைக்கப்பட்டுள்ளது.

தாக்குதலுக்கான காரணம் அல்லது சந்தேகநபர்கள் தொடர்பில் இதுவரை எவ்வித தகவலும் வெளியாகவில்லை. பொலீஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (இ-12)



# கொடுக்குளாய்– இயக்கச்சி பாதை திருத்த வேலைக்காக மூடப்படுகிறது!



பருத்தித்துறை, அக் 29,

வடமராட்சி கிழக்கு கொடுக்குளாய்–இயக்கச்சி அபாயவெளியேற்றப்பாதை இரண்டு நாட்களுக்கு மூடப்படுவதால் மாற்று வழியை பயன்படுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

புலம்பெயர் உறவுகள் மற்றும் அரசியல்வாதிகள், அயல் கிராம மக்களின் உதவியுடன் 78 இலட்சம் ஷரூபா செலவில் போடப்பட்ட கொடுக்குளாய்–இயக்கச்சி அபாயவெளி பாதை தற்பொழுது பயன்படுத்த முடியாத நிலையில் காணப்படுகிறது.

கையிருப்பில் உள்ள சிறு நிதியை கொண்டு பள்ளங்களை கிரவல் மூலம் மூடுவதற்கு தீர்மானித்து இரண்டு நாட்களுக்கு குறித்த அபாயவெளி பாதை முற்றுமுழுதாக மூடப்படுகின்றது.

இது குறித்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த உடுத்துறை கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கத்தின் தலைவரும், கொடுக்குளாய் சக்திவேல் விளையாட்டு கழக தலைவருமாகிய கணேஸ்வரன் மேலும் கூறுகையில்,

இந்த அபாயவெளி பாதை சில நாட்களுக்கு முன்பு திருத்தம் செய்யும் பணியில் ஈடுபட்ட போது பெய்த கடும் மழையால் தற்காலிகமாக நிறுத்தியுள்ளோம். இந்த வேலையை மேற்கொண்டு தொடர்வதற்காக இன்றும், நாளையும் – இரு தினங்கள் அபாயவெளி பாதையை மூடி திருத்தம் செய்யும் பணியில் ஈடுபடவுள்ளோம்.

இந்த அபாயவெளி பாதையால் நாளாந்தம் இரண்டாயிரம் மக்களுக்கு மேல் பயணித்துவருவதால் இதை முற்றுமுழுதாக மூடுவதால் மக்கள் சிரமங்களை எதிர்நோக்குவார்கள். இதை மூடி திருத்தம் மேற்கொள்ளாவிடில் அபாய நேரத்தில் வெளியேற முடியாமல் பலர் உயிரிழக்க நேரிடும் என்பதால் இரண்டு நாட்களுக்கு பாதையை மூடவுள்ளோம்.

இந்த அபாய அபாய வெளி பாதை இருந்திருந்தால் வடமராட்சி கிழக்கில் சுனாமி அனர்த்தத்தின் போது உயிரிழந்த பலரின் உயிர் காப்பாற்றப்பட்டிருக்கும். இதனை கருத்தில் கொண்டு மேலும் இப்படியொரு சம்பவம் இடம்பெறக்கூடாது என்பதற்காக 78 இலட்சம் ஷரூபா செலவில் மக்கள் நாம் உருவாக்கினோம்.

வர்த்தக போக்குவரத்து, அரச ஊழியர்கள், பாடசாலை மாணவர்கள், மருத்துவ நோயாளிகள் என பலர் இந்த பாதையால் பயணிப்பதை அரசாங்கமும், அரசியல்வாதிகளும் அறிந்தும் கண்டுகொள்ளாமல் இருக்கின்றார்கள்.

ஒரு சில அரசியல்வாதிகள் ஆரம்பத்தில் சிறு உதவிகள் செய்த போதும் மேற்கொண்டு இந்த பாதையை புனர்நிர்மானம் செய்ய வேண்டிய தேவை இருப்பதால் ஒரு முறையாவது எமது பிரதேசத்திற்கு வந்து இந்த அவல நிலையை பார்வையிடவேண்டும்.

மழைக்காலம் என்பதால் அவசரமாக இந்த வீதியை கிரவல் கொண்டு செப்பனிட இருப்பதால் முடிந்தவர்கள் உதவி புரிந்து வடமராட்சி கிழக்கு மக்களின் உயிர் கேடயமாக காணப்படும் கொடுக்குளாய்–இயக்கச்சி பாதையை புனரமைப்பு செய்து தருமாறும் கேட்டுக் கொண்டார்.

(ஐ)




## கடன் தொடர்பான விமர்சனங்களுக்கு அநுர தரப்பிலிருந்து பதிலடி

கொபும்பு, அக் 29,

அரசாங்கம் புதிய கடன் எதனையும் பெறவில்லை என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாடு இன்று (29.10.2024) இடம்பெற்றுள்ள நிலையில், அதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

“புதிதாக ஆட்சியமைத்துள்ள அரசாங்கம் எந்தவொரு வெளிநாட்டு நிறுவனத்திடமும் கடன் பெறவில்லை.

மத்திய வங்கியின் கருவூல உண்டியல்கள் மற்றும் பத்திரங்கள் காலாவதியாகும் போது விகிதாசார முறையில் புதியவற்றை வழங்கும் முறை வழமையானது.

கடன் தொடர்பான விமர்சனங்களுக்கு அநுர தரப்பிலிருந்து பதிலடி ; ஊசவைஉைஅ ழுக யுரெசய புழளவ வயமபை டுழயளெ நுஒியடைநென

அத்துடன், நாங்கள் புதிதாக பணம் அச்சிடவுமில்லை என்பதோடு அதை செய்யவும் முடியாது” எனத் தெரிவித்துள்ளார்.

(ஐ)

# சமகால அரசாங்கத்தின் மீது கடும் கோபத்தில் மக்கள்

*கொழும்பு, அக் 29,*

இலங்கையில் அநுர அரசாங்கம் பதவிக்கு வந்து ஒரு மாதத்தையும் கடந்து விட்ட நிலையில், மக்கள் எதிர்பார்த்த மாற்றங்கள் எதுவும் நிகழ்ந்துள்ளதா என்பது தொடர்பில் கவலை வெளியிடப்பட்டது.



நாட்டில் சடுதியாக அமெரிக்க டொலரின் பெறுமதி வீழ்ச்சி அடைந்துள்ளது. பணவீக்கம் குறைவடைந்துள்ளது என பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

எனினும் மக்கள் வாழ்க்கை செலவு மட்டும் எந்தவித மாற்றமும் இன்றி அதிகரிப்பிலேயே உள்ளதாக மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

பாதகமான விளைவு

கடந்த ரணில் அரசாங்கத்தின் இறுதிக்காலப்பகுதி சுமுகமான நிலையில் இருந்த போதும், தற்போது அது பாதகமான விளைவுகளை ஏற்படுத்துவதாக பலர் ஆதங்கம் வெளியிட்டுள்ளனர்.

இந்த மாதத்தில் பொருட்களின் விலைகளில் கணிசமான அதிகரிப்பை உணர்வதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த மாதத்தில் பொருட்களுக்காக 10 ஆயிரம் ரூபா செலவிட்ட நிலையில், அதே பொருட்களுக்கு தற்போது 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொகை செலவிடுவதாகவும் பலர் குறிப்பிட்டுள்ளனர்.

ஆட்சியை பொறுப்பேற்றதுடன் பல்வேறு மாற்றங்களை செய்யப் போவதாக தேர்தல் மேடைகளில் சூளுரைத்த சமகால ஜனாதிபதி, தனது ஆட்சியை பலப்படுத்தும் நோக்கிலேயே செயற்படுவதாகவும், மக்கள் நலன்சார்ந்த எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லையும் பலர் குறைப்பட்டுள்ளனர்.

டொலரின் பெறுமதி

கடந்த ரணில் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட பல்வேறு சாதகமான நிலைப்பாட்டினை சமகால அரசாங்கம் அனுபவித்து வருவதாகவும் அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

தற்போதைய அமெரிக்க டொலரின் பெறுமதி வீழ்ச்சிக்கான அனைத்து நடவடிக்கைககளையும் கடந்த அரசாங்கம் மேற்கொண்டிருந்தது. சுற்றுலா பயணிகளை நாட்டுக்குள் கொண்டு வர பல்வேறு வேலைத்திட்டங்களை சர்வதேச மட்டத்தில் முன்னெடுத திருந்தனர்.

அதன் காரணமாக பெருந்தொகை சுற்றுலா பயணிகளால் அமெரிக்க டொலர் உள்வருகை அதிகரித்துள்ளது.

மத்திய வங்கியில் டொலரின் கையிருப்பு அதிகரித்துள்ள நிலையில், அதன் கட்டுப்பாட்டு விலையை சடுதியாக குறைக்கவும் சமகால அநுர அரசினால் முடிந்துள்ளதாகவே பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

கடவுச்சீட்டு நெருக்கடி

அதேவேளை, கடந்த பல மாதங்களாக நாட்டில் நிலவும் கடவுச்சீட்டு நெருக்கடிக்கு தீர்வு வழங்கப்பட்டுள்ளதாகவும், நீண்ட வரிசைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளதாகவும் அரசு தரப்பில் பிரச்சாரங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

எனினும் பத்தரமுல்லையில் அமைந்துள்ள குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் தலைமை அலுவலகத்திற்கு முன்பாக மக்கள் மீண்டும் நீண்ட வரிசையில் இன்றும் காத்திருக்கின்றனர்.

கடவுச்சீட்டுகளைப் பெற மீண்டும் டோக்கன் வரிசையில் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக மக்கள் குற்றம் சாட்டுகின்றனர். அதிகாலை நான்கு மணியில் இருந்து நீண்ட வரிசையில் காத்திருப்பதாக பலர் தெரிவித்துள்ளனர்.

நாட்டில் ஏற்பட்டிருந்த அநுர அலை தற்போது மெல்ல மெல்ல குறையத் தொடங்கியுள்ளதுடன், அரசின் மீது மக்கள் தமது எதிர்ப்புக்களை வெளிக்காட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை, புதிய அரசாங்கம் பொறுப்பேற்று குறுகிய காலத்தில் பாரிய மாற்றங்கள் ஏற்பட வாய்ப்பு இல்லை என்றும், அதற்காக சில காலங்கள் பொறுத்திருந்து பார்க்கலாம் என சில தரப்பு மக்கள் தெரிவித்துள்ளனர்.



(ஐ)



‘ எமது மக்களுக்கான எனது பணி மேலும்
உத்வேகமாக தொடர்ந்திட ஆதரவளிப்பீர் ’

3



தமிழர் விடுதலை கூட்டணி
வன்னி தேர்தல் தொகுதி

## செ.சந்திரகுமார் (கண்ணன்)

சமூக தொண்டன், தமிழ் விருட்சத்தின் ஸ்தாபகர்

**வீடுகள்**
- நிரந்தர கல் வீடுகள் - 28
- வீடு திருத்த உதவிகள் - 15
- தற்காலிக வீடுகள் - 10
- தற்காலிக வீடுகளுக்கு தகரங்கள் வழங்கி புனரமைத்தமை - 45

**கிணறுகள்**
- பொதுக் கிணறு - 02
- குழாய்க் கிணறுகள் - 22

**மருத்துவ உதவிகள்**
- மருத்துவ உதவிகள் இதுவரை - 54

**கல்வி**
- கற்றல் உபகரணங்கள் வழங்கியமை இதுவரை - 18,220
- பாடசாலைகளுக்கான கல்வி உதவிகள் இதுவரை- 42
- பாடசாலைகளுக்கான பயிற்சி கருத்தரங்கு, வளவாளர் கொடுப்பனவு இதுவரை - 28
- துவிச்சக்கர வண்டிகள் மாணவர்கள், பெண் - தலைமைத்துவ பெண்கள் இதுவரை -320
- மாதாந்த கல்வி உதவிகள் இதுவரை - 380
- அறநெறி பாடசாலை கட்டிடம் - 02

**உலர் உணவுப் பொதிகள்**
- உலர் உணவுப் பொதிகள் இதுவரை - 19,800
- கொரானா கால மக்கள் துயர்துடைப்பு உலர் உணவு பொதிகள் வழங்கியமை- 3800
- பொங்கற் பானைகள் இதுவரை - 9100

**விளையாட்டு**
- விளையாட்டு நிகழ்வுக்கான அனுசரணை இதுவரை- 60
- விளையாட்டு நிகழ்வுக்கு வீரர்கள் வெளிநாடு செல்வதற்கான அனுசரணை இதுவரை- 10

**வாழ்வாதார உதவிகள்**
- பெண் தலைமைத்துவ குடும்பங்கள், முன்னாள் போராளி இதுவரை - 310

**பொது நிகழ்வுகள்**
- கலாசார நிகழ்வுகளுக்கான அனுசரணை இதுவரை- 78
- கோவில் அன்னதானம், இல்லங்களுக்கான
- மதிய உணவு இதுவரை - 1250

இதை விட வவுனியாவிலுள்ள பெரியார் சிலை விழாக்கள், பண்பாட்டு விழாக்கள், சிரமதானம், இரத்ததான முகாம் மற்றும் சக மதத்தினரின் விழாக்கள், நிகழ்வுகள் போன்றவற்றில் கலந்து கொள்ளலும், அனுசரணை வழங்கலும்.

உங்கள் ‘அன்பு’ எனும் 3 எழுத்தை
‘வாக்கு’ எனும் 3 எழுத்தாக்கி என்னை
‘வெற்றி’ எனும் 3 எழுத்தை
அடைய செய்வீர்கள் என்ற நம்பிக்கையில்

**உங்களால் நான்,**
**உங்களுக்காக நான்**

எங்கள் சின்னம்



## நாடாளுமன்றத் தேர்தல் - 2024
## யாழ் - கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்

சமூக தொழின் முனைவர், தகவல் தொழில்நுட்ப வல்லுநர்

# கௌரி
B.Sc, LL.B (Hons) (UK)



4



தமிழர் இருப்பு, பொருளாதார அபிவிருத்தி

உங்களில் ஒருத்தி பாராளுமன்றம் நோக்கி

தமிழர் விடுதலைக் கூட்டணி

1 2 3 4 5 6 7 8 9



# நான்கு வகை நிலத்திலும் காணி விற்பனைக்கு!


வடக்கு (யாழ்ப்பாணம்) - கிழக்கு (மட்டக்களப்பு) - மலையகம் (பதுளை)

| கி.அரியாலை | எழுதுமட்டுவாழ் | மட்டக்களப்பு | அப்புத்தளை |
|---|---|---|---|
| மருதம் | முல்லை | நெய்தல் | குறிஞ்சி |
| வயலுடன் கூடிய மேட்டுக்காணியும் பண்ணை வீடும் பொழுதுபோக்குகளும்...! | மரங்கள் நிறைந்த இயற்கை சூழலில் ஓய்வுகால வீட்டிற்கான காணித் துண்டுகள்...! | கடலும் ஆறும் அருகருகே அமைந்த மீன்பாடும் தேன்நாட்டில் விடுமுறை வீட்டிற்கு...! | மலைகளின் நடுவில் இளிர்ந்த பிரதேசத்தில் வாசனைத் திரவியமும் சுற்றுலா விடுதியும்...! |

காணி கொள்வனவிற்கு : 0777 43 5557



# வாசிப்பும் நானும்



வாசிப்பு என்பது பலருக்கும் பிடித்தமான ஒன்றாகவே இருக்கிறது. ஆனால் தேடிப்பார்க்கின்ற போது பலர் வாசிப்பு ஆர்வம் அற்றவர்கள் போலவே இருக்கின்றார்கள். இதற்கு என்ன காரணம்? நூலகங்கள் பல இருந்தாலும் அவற்றை நாடுவோர் எண்ணிக்கை ஒப்பீட்டளவில் குறைவாக இருப்பதன் காரணம் என்ன?

முதல் காரணமாக நான் கருதுவது பலருக்கு தமக்கு பொருத்தமான புத்தகங்களை கண்டடைய முடியாமல் போகின்றது. தமது வாசிப்பு தேடலைப் பூர்த்தி செய்யும் புத்தகத்தை அவர்களால் கண்டடைய முடிவதில்லை. நூற்றுக்கணக்கான நூல்களை வாசித்துள்ள எனக்கே பல சமயங்களில் இந்த சிக்கல் ஏற்பட்டுவிடுகிறது.

அடுத்தது மாணவப்பருவத்தில்வாசிப்பு அநாவசியமான ஒன்றாக பார்க்கப்படுவது. கற்பிக்கும் ஆசிரியர்கள் இந்த பாடம் தொடர்பில் நூலகத்தில் ஏதேனும் தேடிக் கொண்டு வா என்று சொல்வதில்லை. நூலக ஆசிரியரே நூலகத்திற்கு மாணவர்களை அழைக்காத நிலையே பல பாடசாலைகளிலும் காணப்படுகின்றது. இந்த பின்னணியில் பல்கலைக்கழகத்திற்குள் நுழையும் மாணவர்கள், நூலகமும் நூல்களும் அப்போதைய ஆய்வுத் தேவைக்கு மாத்திரம் தான் என் முடிவு செய்து விடுகின்றனர். ஒரு சிலரே தமது துறை சார்ந்தேனும் நூல்களை வாசிக்கின்றனர்.

எனக்கு வாசிப்பு மிகவும் பிடித்தமான ஒன்று. எட்டாம் வகுப்பில் இருந்து நூலகத்தின் அறிமுகம் எனக்கு கிடைத்தது. அதன் பின்னர் சில புத்தகங்கள் மற்றும் இணைய வாசிப்பு எனக்குத் தீனி போட்டிருக்கிறது. பாடசாலைக் காலத்தில் வாசிக்க ஆரம்பித்த பின்னர் பத்திரிகைகளுக்கும் எழுத ஆரம்பித்தேன். சில ஆக்கங்கள் பத்திரிகைகளில் வெளியாகியுள்ளன.

வாசிப்பை நேசிப்போம் என்ற தலைப்பில் நான் எழுதிய சிறிய கட்டுரை இலங்கையின் வீரகேசரி வார இதழில் 2008 ஆம் ஆண்டு வெளியானது. ஆம். வாசிப்பை நேசிப்போம் என்ற தலைப்பில் தான் அதனை எழுதியுள்ளேன். அதே பெயரில் பேஸ்புக்கிலும் ஒரு குழுவை கண்டதும் உடனடியாகவே அதில் இணைந்து இன்று வரை தொடர்ந்து கொண்டிருக்கிறேன்.

நான் பாடசாலையில் கற்ற போது பல சந்தர்ப்பங்களில் நூலகம் மூடியே கிடந்திருக்கிறது. புத்தக கணக்கெடுப்பு என்று மூடினால் மாதக்கணக்கில் மூடியே கிடக்கும். ஆனால் எங்கு எந்த புத்தகம் இருந்தது என்று ஆசிரியரை விடவும் நான் நன்றாக அறிவேன். அந்த நூலகம் இன்னும் சிறப்பாக பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என நான் கருதுகிறேன்.

பாடசாலைக் காலத்தில் பொன்னியின் செல்வன், மகாபாரதம் போன்ற பெரிய பெரிய நூல்தளையெல்லாம் வாசித்துத் தள்ளியிருக்கிறேன். பகல் உணவைத் தவிர்த்து பிரதேச பொது நூலகத்தில் நாளைச் செலவிட்டிருக்கிறேன்.

இடையில் சில காலம் நான் வாசிப்பதையோ எழுதுவதையோ முழுமையாக விட்டு விட்டேன். இப்போது யோசித்துப் பார்த்தால் அது என்னால் எப்படி முடிந்தது என்று மிகவும் ஆச்சரியமாகவும் அதிர்ச்சியாகவும் இருக்கிறது.

ஏனெனில் நூலக அறிமுகம் கிடைப்பதற்கு முன்னரே பாடப் புத்தகத்திற்குள் கதைப் புத்தகத்தை மறைத்து வைத்து வாசித்தவன் நான். வாசிப்பை ஒரு போதும் நானோ, என்னை வாசிப்போ விட்டதில்லை. நிலைமை அப்படி இருக்க, இது இரண்டையும் விட்டு நான் விலகியிருந்த காலம் ஒரு இருண்ட காலம் என்று தான் சொல்ல வேண்டும்.

இன்னும் இருக்கிறது வாசிப்பைப் பற்றிப் பேச. ஆனால் இப்போதைக்கு இது போதும். மீண்டும் சந்தர்ப்பம் அமைந்தால் இன்னும் பேசலாம். அதுவரை தொடர்ந்து வாசிப்போம், வாசிப்பை நேசிப்போம்!
















காணாமல் போனவர்களுக்கான அலுவலகத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மாவட்டத்தைச்சேர்ந்த சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளுக்கும்

காணாமல் போனவர்களுக்கான அலுவலகத்துக்குமிடையிலான கலந்துரையாடல் ஒன்று கிளிநொச்சி மாவட்ட திறன் விருத்தி மண்டபத்தில் இன்று காலை நடைபெற்றது.




# யாழில் இடம்பெற்ற கோர விபத்து



யாழ்ப்பாணம், *அக் 29,*

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை - தெல்லிப்பளை வீதி யாழ்ப்பாண கல்லூரிக்கு அருகில் கோர விபத்து இந்த விபத்து இன்று காலை 7.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாண கல்லூரியிலிருந்து சங்கரத்தை செல்லும் பாதையில் சுமார் 200 மீட்டர் தூரத்தில் பெண் மருத்துவர் ஒருவருடைய காரும் மோட்டார் சைக்கிள் ஒன்றும்மோதியே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

கல்லூரியில் கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பொலிஸாரை மீறியும் அதீதவேகமாக பயணித்துள்ளதாக நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர். விபத்தில் ஒருவர் படுகாய மடைந்த நிலையில் யாழ்.போதனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மேலும் விபத்து தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பொலிஸார் வட்டுக்கோட்டைப் முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)




## வவுனியா குடிவரவு திணைக்களத்தில் கால்கடுக்க நிற்கும் மக்கள்





வவுனியா, *அக் 29,*

வவுனியா குடிவரவு, குடியகல்வு திணைக்கள காரியாலயத்தில் மக்கள் கடவுச்சீட்டுகளை பெற நீண்ட வரிசைகளில் காத்திரும் அவலநிலை ஏற்பட்டுள்ளது.

நாள் ஒன்றுக்கு 25-20 நபர்களுக்கு வழங்கப்படும் கடவுச்சீட்டுக்காக , சுமார் 700 தொடக்கம் 1000 பேர் வரையில் இரவு பகலாக வரிசைகளில் நிற்கின்றனர்.

வயோதிபர்கள் தொடக்கம் கர்பிணி தாய்மார்கள், சிறுகுழந்தைகளுடனான பெற்றோர்கள் என பலர் கடவுச்சீட்டுக்காக காத்திருக்கின்றனர்.

அரசாங்கம் அண்மையில் கடவுச்சீட்டுக்களை பெறுவதில் உள்ள தாமதங்கள் நீக்கப்படும் என அறிவித்திருந்த போதிலும் இதுவரை தீர்வு கிடைக்கவில்லை.

இந்நிலையில் வவுனியா குடிவரவு, குடியகல்வு திணைக்கள காரியாலய பகுதியின் அசுத்தமான பகுதிகளில் மக்கள் வரிசையில் நிற்கின்றார்கள்.

அப்பகுதியில் உள்ள கால்வாயில் கழிவு நீர் ஓடாமல் தேங்கிநிற்பதுடன் துர்நாற்றம் வீசி வருகின்றபோதும், தொடர்பில் வவுனியா நகர சபையோ குடிவரவு குடியகல்வு திணக்களமோ எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

எனவே கடவுச்சீட்டுக்களை மக்கள் இலகுவாக பெற ஆவன செய்யவேண்டுமென அங்குள்ள மக்கள் அரசாங்கத்திடம் கோரிக்கை முன்வைத்துள்ளனர். (ஐ)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 29.10.2024இல் வெளியிடப்பெற்றது.